"நசரேயனாகிய இயேசு கிறிஸ்து... அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" **(அப்போஸ்தலர் 4:12)**

இரட்சிப்பு என்றால் என்ன ?

அதை மனிதன் எவ்வாறு பெறமுடியும் ?

இந்தச் சிறுநூல், மனிதன் மற்றும் தேவன் யார் என்றும், தேவன் எவ்வாறு ஒரு வழியை உண்டாக்கினார். அந்த ஒரே வழி மூலமாக மட்டும் மனிதன் எவ்வாறு மரணத்திலிருந்து முடிவில் இரட்சிக்கப்பட முடியும் என்றும் வேதாகமத்தின் ஆதாரத்துடன் காண்பிக்கிறது.

SALVATION - Tamil
1500 Copies - 2007

- ✦ இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை
- ✦ வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி
- ✦ அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு

**கிறிஸ்டடெ.ஃ.ல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 4237
பெங்களூர் 560042, இந்தியா

வேறு இடங்களுக்கு
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**



# இரட்சிப்பு

ஜேம்ஸ் மற்றும் டெப் ப்லின்ற்

Cover illustration :
Bible quotations from the New International Version
copyright International Bibile Society

Published and Printed by
**Printland Publishers**
**GPO Box 159**
**Hyderabad A.P. 500001**
India.



# இரட்சிப்பு

ஜேம்ஸ் மற்றும் டெப் ஃப்லின்ற்

# பொருளடக்கம்

முகவுரை ........ 1

பாகம் -1

தேவன் எல்லா ஆண்களும் பெண்களும் இரட்சிக்கப் பட வேண்டும் என்றே விரும்புகிறார் ........ 2

பாவத்திலும் மரணத்திலுமிருந்து இரட்சிக்க தேவனால் எப்படி முடியும்? ........ 4

இரட்சிப்பு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே ........ 7

தேவன் ஆண்களையும் பெண்களையும் எப்போது இரட்சிப்பார்? ........ 9

தொகுப்பு ........ 11

பாகம் - 2

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? ........ 12

தேவையான படிகள் ........ 12

1. கிருபையைப் பெறத் தாழ்த்துதல் ........ 12
2. விசுவாசம் வைத்தல் ........ 13
3. மனந்திரும்புதல் ........ 16
4. ஞானஸ்நானம் பெறுதல் ........ 16
5. கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை ........ 18
6. ஒருமுறை இரட்சிப்பு நிரந்தர இரட்சிப்பா? .. 22

முடிவுரை ........ 26

கேள்விகள் ........ 28



# இரட்சிப்பு

ஜேம்ஸ் மற்றும் டெப் ஃப்லின்ற்

## முகவுரை

வாழ்கை வாழ்வதும் சாவதும் மட்டுமல்லாமல் அதைவிட அதிகமானது என நம் இருதயத்தில் அறிவோம். நாம் ஆகாயத்தை உற்றுப் பார்த்து சிருஷ்டிப்பின் அதிசயத்தை உணர்ந்துக் கொள்வதின் மூலம் நம்மைவிட பெரிய சக்தி ஒன்று இருப்பதை உணர்கிறோம். மனித சரீரத்தின் வினோதத்தைப் பார்த்து நாம் ஏதோ விபத்தினி மித்தமோ அல்லது தற்செயலாகவோ இங்கு இல்லை என்று உணர்கிறோம். ஆகையால் ஏன் நாம் இங்கு இருக்கிறோம்? நாம் உயிர்வாழ்வதின் அர்த்தம் என்ன?

அநேகருக்கு, வாழ்க்கை முழுவதும் பாடுகளும் துன்பமும் தான். வாழ்க்கை அநேகமுறை நியாயமற்றதும் அர்த்தமற்றதும் நோக்கமற்றதுமாக காணப்படுகிறது. ஆனால் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் வாழ்க்கையில் அர்த்தமும் நோக்கமும் உண்டு என்று சொல்லியிருக்கிறார். வாழ்க்கை என்பது வாழ்வதும் சாவதும் மட்டுமல்லாமல் அதைவிட அதிகமானது என்று சொல்லியிருக்கிறார்.

வேதம் நமக்குச் சொல்கிறது, தேவன் எல்லா ஆண்களையும் பெண்களையும் பிரயோஜனமற்ற வாழ்க்கை வாழ்வதிலிருந்து இரட்சித்து அவர்களை தம்முடைய அனாதி திட்டத்திற்குள் சேர்க்க விரும்புகிறார். வேதாகமம் ஒரு நம்பிக்கையின் புஸ்தகம், அது இரட்சிப்புக்கு நடத்தும் வழியை நமக்குக் காண்பிக்கிறது.

**பாகம் 1**

## தேவன் எல்லா ஆண்களும் பெண்களும் இரட்சிக்கப் பட வேண்டும் என்றே விரும்புகிறார்.

*எல்லா ஆண்களையும் பெண்களையும் இரட்சிக்க விரும்புவதாக தேவன் நம்மிடம் கூறுகிறார். "நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்"* ( I தீமோத்தேயு 2:3-4).

*"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."* (2. பேதுரு 3:9).

பூமி முழுவதையும் தம்முடைய மகிமையாலும் ஞானத்தினாலும் நிரப்பப்போவதாகவும் தேவன் நமக்குச் சொல்லுகிறார்.

*''அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்" (சங்கீதம் 72:19). "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்* (ஏசாயா 11:9)."

*"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"* (ஆபகூக் 2:14).



தேவனை அறிந்துக்கொண்டு, அவருடைய மகிமையை பிரதிபலிக்கிற ஆண்களையும் பெண்களையும் இரட்சிப்பதின் மூலம் தேவன் பூமியைத் தம்முடைய மகிமையாலும், அறிவாலும் நிரப்புவார். ஆனபோதிலும் இன்று யுத்தம், வியாதி, வறுமை, பாடுகள் மற்றும் சீற்றத்தால் சிதறின உலகையே பார்க்கிறோம். அநேக மனிதர்களுக்கு தேவனைப் பற்றிய அறிவோ, அறிந்துக்கொள்ளும் விருப்பமோ சிறிதளவும் இல்லை. தேவனுடைய வல்லமையைப் பிரதிபலிப்பதிலிருந்து இன்றைய உலகம் விலகி காணப்படுகிறது.

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாத மனிதர்களால் பூமி நிறைந்திருக்கும்போது, பூமி எப்படி தேவனுடைய மகிமையால் நிறைந்திருக்கமுடியும்? ஏதேன் தோட்டத்தில் முதல் மனிதனுடைய தோல்வியிலிருந்தே எல்லா ஆண்களும் பெண்களும் தேவனுக்குக் கீழ்ப்படியாத தன்மையை இயற்கையாகவே பெற்றிருக்கிறோம். அதன் விளைவாக, பாவம் செய்து எல்லா மனிதரும் முடிவாக மரணம் அடைகிறோம்.

*"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்த படியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இருவுமாயிற்று"* (ரோமர் 5:12).

பூமி தேவனுடைய மகிமையால் நிரப்பப்படுவதற்கு முன்பாக பாவம் கண்டிப்பாக அகற்றப்படவேண்டும். பாவம் அகலும்போது அதனோடு தொடர்புடைய எல்லா பிரச்சனைகளும் மறைந்துவிடும். இது நடப்பதற்காக தேவன் தம்முடைய இரட்சிப்பின் திட்டத்தை நமக்கு சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட திட்டம் இல்லாமல், பூமி ஒருபோதும் தேவனுடைய வல்லமையைப் பிரதிபலிக்கயியலாது. நாமும், நம்பிக்கையற்று இருப்போம்.

## பாவத்திலும் மரணத்திலுமிருந்து இரட்சிக்க தேவனால் எப்படி முடியும்?

ஏதேன் தோட்டத்தில் பாவத்தையும் மரணத்தையும் அறிமுகப்படுத்தி நடத்திய படிகளைக் கவனியுங்கள்:

1. ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாததற்கு முன்புவரை பூமி தேவனுடைய மகிமையால் நிறைந்திருந்தது (ஆதியாகமம் 2:16-17, 3:6-13).
2. பாடுகளை அனுபவிக்கக் கூடிய அழிவுடைய தன்மையை அவர்கள் தண்டனையாக பெற்றார்கள். (ஆதியாகமம் 3:15-19).
3. எல்லா மனிதரும் இதே அழிவுள்ள தன்மையை பெற்றுள்ளார்கள் (ரோமர் 5:12, 1. கொரிந்தயர் 15:21-22)
4. பாவத்தையும், மரணத்தையும் விலக்கி இந்த பூமியை தேவனுடைய மகிமையால் நிரப்ப, மேல் கூறப்பட்டுள்ள படிகள் மாற்றப்பட வேண்டும். நடந்தது இதுதான். ஆதாம் எதில் தவறினானோ அதில் இயேசு கிறிஸ்து வெற்றிசிறந்தார். இயேசு பாவமே செய்யவில்லை, அவர் முழுமையாக தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். அதினால் தேவன் நம்மை இரட்சிக்கவும் பூமியைத் தம்முடைய மகிமையால் நிரப்பவும் ஒரு வழியைத் திறந்தார்.

பாவத்தையும் மரணத்தையும் விலக்க வழிநடத்தும் படிகள் நாம் காணுமாறு கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. இயேசு கிறிஸ்து, தேவனுக்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்தார் (எபிரெயர் 4:15).
2. பாவம் செய்யமுடியாத ஒரு அழிவற்ற தன்மையைப் பரிசாக பெற்றுக்கொண்டார் (அப்போஸ்தலர் 2:22-24).



3. அழிவற்ற தன்மையை எல்லாரும் பெற்றுக்கொள்ளலாம். (ரோமர் 6:8-12).

கிறிஸ்துவின் மூலமே தேவன் ஆண்களையும் பெண்களையும், பாவத்திலும் மரணத்திலுமிருந்து விடுவிக்க முடியும். தேவனுடைய வல்லமையை பரிபூரணமாய் பிரதிபலிக்க கூடிய தன்மையை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். பாடுகளுக்கும் மரணத்திற்கும் அந்த சரீரம் ஆளாகாது.

*''மனுஷனால் (ஆதாம்) மரணம் உண்டானபடியால், மனுஷனால் (இயேசு) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்''* (கொரிந்தியர் 1. 15:21-22).

இயேசு பரிபூரணராக இருந்தபடியால் அவர் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார் என்பதை நாம் உணரமுடிகிறது. ஆனால் பாவிகளாகிய நாம் எப்படி இந்த இரட்சிப்பின் ஆசீர்வாதத்தில் பங்குபெற முடியும்?

தேவனுடைய கிருபை அல்லது கருணையால் தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நாம் தனிப்பட்டமுறையில் பாவிகள் ஆகையால் மரணத்திற்கு தகுதியுடையவர்கள் (ரோமர் 6:23), இரட்சிபுக்கு தேவையான படிகளை நாம் பின்பற்றினால் நாம் நியாயத்தீர்ப்பின் நாளிலே பூரணராக தகுதியாக்கப்படுவோம் (கொலோசெயர் 1:22, யூதா:24). தேவனுடைய பார்வையில் நாம் பூரணராகக் காணப்பட்டால் அவர் தமதுடைய பூரணரான மகனுக்குக் கொடுத்த அதே பரிசை (நித்திய ஜீவன்) நமக்குப் பரிசளிப்பார்.

இது தேவன் செய்யக் கூடிய ஆச்சரியமான ஒரு காரியம். அவர் நம்முடைய தோல்விகளை எல்லாம் அழித்து, நம்மைப்

பூரணராய் கண்டு, நம்மால் முழுவதும் அறிந்துக் கொள்ள இயலாத மிகப்பெரிய பரிசைத் தருவதற்கு ஆயத்தம் உள்ளவராய் இருக்கிறார். இது தேவனுடைய அளவிடமுடியாத அன்பையும் நம்மை இரட்சிப்பதற்கு அவருக்கு இருக்கிற மிகுதியான வாஞ்சையையும் கோடிட்டுக் காண்பிக்கிறது.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் ஒரு மனிதன் தன்னை மூடிக்கொள்ள ஒரு மேல்சட்டையைப் போட்டுக்கொள்வது போன்றது. நாம் பாவம் செய்யும் போது நாம் நிர்வாணத்தின் அடையாளமாக தேவனுடைய கண்களில் காணப்படுகிறோம். நம்முடைய மாம்சீக பெலவீனமும், குறைகளும் தேவனுக்கு வெளியரங்கமாகிறது. ஏதேன் தோட்டத்தில் முதல் பாவம் செய்யப்பட்டபோது, இந்த கருத்தை நாம் காணமுடிகிறது. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது தாங்கள் நிர்வாணிகளென்று உணர்ந்து, வெட்கி அத்தியிலையினால் தங்கள் நிர்வாணத்தை மூட முயற்சித்தார்கள் (ஆதியாகமம் 3:7). ஆகிலும் அது ஏற்றுக் கொள்ளமுடியாத உடையாக இருந்தது. அவர்கள் பாவத்தை மறைக்க அதற்கு பதிலாக தேவன் ஒரு மிருகத்தின் தோலால் செய்யப்பட்ட உடையை அவர்களுக்குக் கொடுத்தார். (ஆதியாகமம் 3:21).

அந்த நேரமுதல், இரத்தம் சிந்துதல் (அது ஒரு மிருகத்தோலினால் ஏற்பட்ட பலியாக இருந்தது) பாவத்தை மூடுவதற்கு மிகவும் இன்றியமையாததாக மாறிவிட்டது, (யாத்திராகமம் 29:36, லேவியராகமம் 1:4, எபிரெயர் 9:22).

நாம் எல்லோரும் பாவிகளாய் இருக்கிறபடியால் நாமெல்லோரும் தேவனின் பார்வையில் 'நிர்வாணமாய்' காணப்படுகிறோம். நாம் தேவனுடைய பார்வையில் பூரணராய் காணப்பட்டு இரட்சிக்கப்பட நமக்கு ஒரு உடை தேவைப் படுகிறது.

இன்று நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்



எடுக்கும்போது, கிறிஸ்துவை அடையாளமாக அணிந்து கொள்ளுகிறோம். அவரே நம்முடைய பாவத்தை மூடும் உடையாக மாறிவிடுகிறார். *''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே''* (கலாத்தியர் 3:27).

இந்த கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளல் என்பது கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்தீகரிக்கப் பட்ட வெண்மையான உடையைத் தரிப்பதற்கு ஒத்தது. (வெளிப்படுத்தல் 7:13-14).

இந்த உடையை நம்முடைய பாவங்களுக்காக தந்ததின் மூலம் தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவைப் போல நீதியும் உத்தமமும் உள்ளவர்களாகக் கருதமுடியும் (ரோமர் 5:8-11). ஆகிலும் இந்த உடை பாவத்தினால் கறைப்படலாம் (யூதா:23). எனவே பாவமன்னிப்பை வாஞ்சிப்பதின் மூலம் சுத்தமாக காத்துக்கொள்ளப்பட வேண்டும். ( 1. யோவான் 1:7-9). கிறிஸ்துவும் வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் நம்முடைய உடையைக் 'காத்துக்கொள்ள' வேண்டும் என எச்சரிக்கிறார். பின்மாற்றத்தின் மூலம் நாம் நம்முடைய உடையை இழந்துவிட்டால், நம்முடைய பாவத்தை மறைக்கும் உடையை நாம் இழந்துவிடுகிறோம். எனவே தேவன் நம்மை இரட்சிக்க மாட்டார்:

"இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" (வெளிப்படுத்தல் 16:15).

## இரட்சிப்பு இயேசுகிறிஸ்துவின் மூலம் மட்டுமே

இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே என உணர்ந்துக் கொள்ளுதல் மிகவும் முக்கியம் வாய்ந்தது. வேறு

ஒருவரும் பரிபூரணமான வாழ்க்கை வாழவில்லை, ஆகவே பாவத்திற்கும் மரணத்திற்கும் நடத்தின முறையை மாற்றி நமக்கு நம்பிக்கையைக்கொடுக்க வேறு ஒருவரும் தகுதிப் பெறவில்லை.

நாம் இயல்பான உண்மையுடன் தேவனை நேசித்து வாழ்ந்தால் நாம் நிச்சயமாய் இரட்சிக்கப்படுவோம் என நமக்குச் சொல்லும் சில கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவரல்லாதவர்களு முண்டு. ‘‘அநேக மார்க்கங்கள் இரட்சிப்புக்கு நேராய் நடத்துகிறது. அதில் நாம் தெரிந்துக்கொள்ளும் பாதை நம்முடைய சூழ்நிலையைப் பொறுத்தது” என்று அவர்கள் சொல்வார்கள். ஆனபோதிலும் இயேசுகிறிஸ்துவினாலும் மற்றும் இயேசுகிறிஸ்துவின் மூலம் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று வேதாகமம் கூறுகிறது. *“அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”* (யோவான் 14:6).

*“உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும்... தெரிந்திருக்கக்கடவது. ‘வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்.’ அவராலேயன்றி, வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.’’* (அப்போஸ்தலர் 4:10-12).

*“தேவன் நம்மைக் கோபாக்கினைக் கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலாய்*



*இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே”* (1. தெசலோனிக்கேயர் 5:9-10)

*‘‘அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,....”* (எபிரெயர் 5:8-9).

## கிருபையினாலே இரட்சிப்பு

இரட்சிப்பு இயேசுகிறிஸ்துவின் மூலம் மட்டுமே என்பதினால் அதை நாம் சம்பாதிக்க முடியாது என்பது தெளிவாகிறது. இதன் மூலம் அது ஒரு வெகுமதியே என்று வெளியாகிறது.

*‘‘கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;”* (எபேசியர் 2:8).

நாம் இந்த விஷயத்தை அதிக விரிவாக இரண்டாம் பாகத்தில் ஆலோசிக்கலாம்.

## தேவன் ஆண்களையும் பெண்களையும் எப்போது இரட்சிப்பார்?

தேவன் நம்மை இரட்சித்து இந்த பூமியை தம்முடைய மகிமையால் நிரப்புவதற்கு முன் இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு திரும்பி வருதல் நேரிட வேண்டும். இயேசு பூமிக்கு மீண்டும் திரும்பி வருகிறார் என மிகவும் தெளிவாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது: *“கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்து, நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக*

*வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"* (அப்போஸ்தலர் 1:11).

இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்பிவரும் போது, இரட்சிப்புக்குத் தேவையான படிகளைப் பின்பற்றிய அனைவருக்கும் நித்திய ஜீவனைப் பரிசாக அளிப்பார்.

*"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது"* (வெளிப்படுத்தல் 22:12).

''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" ( 1. கொரித்தியர் 15:22-23).

கிறிஸ்து மறுபடியும் வரும்போது அவர் தேவனுடைய இராஜ்ஜியத்தை மறுபடியும் பூமியில் ஸ்தாபிப்பார். முன்பும் தேவனுடைய இராஜ்ஜியம் பூமியில் காணப்பட்டது. (1. நாளாகமம் 28:5), ஆகிலும் ராஜாக்களின் துஷ்டத் தனத்தினிமித்தம் தேவன் அதை விலக்கிப்போட்டு, கிறிஸ்து திரும்பிவரும்வரை இனி ஒரு இராஜாவும் இருப்பதில்லை என தேவன் ஆணையிட்டார் (எசேக்கியேல் 21:26-27, 2. சாமுவேல் 7:12-16 மற்றும் லூக்கா 1:31-33 ஒப்பிடுக).

ஆபிரகாமுக்கும், தாவீதுக்கும் தேவன் அளித்த மேலான வாக்குத்தத்தங்கள் பூமியில் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றியே இருந்தன. (ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் மற்றும் பூமியில் தேவனுடைய இராஜ்ஜியம் குறித்து மேலும் விவரங்களுக்கு பின்னால் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் உங்களுக்கு அருகாமையில் உள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்).



இந்த இராஜ்ஜியம் பூமியில் 1000 வருடங்கள் நீடிக்கும் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. (வெளிப்படுத்தல் 5:10 மற்றும் 20:4). இந்த 1000 ஆண்டுகளுக்குப் பின் பாவமும் மரணமும் முற்றிலுமாக நீக்கப்பட்டு பூமிமுழுவதும் தேவனுடைய மகிமையால் நிறைந்திருக்கும் ( 1. கொரிந்தியர் 15:24-28).

## தொகுப்பு

முதலாம் பாகத்தின் தொகுப்பில் நாம் கண்டது:

- தேவன் பூமியைத் தம்முடைய மகிமையால் நிரப்புவார்.
- அவர் இப்படி செய்யுமுன் பூமியிலிருந்து பாவமும் மரணமும் முற்றிலுமாக நீக்கப்படவேண்டும்.
- தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினதின் மூலம் பாவத்தையும் மரணத்தையும் நீக்க தேவன் இரட்சிப்பின் திட்டத்தை உருவாக்கினார்.
- இயேசு ஒருபோதும் பாவம் செய்யாததின் விளைவாக மரணத்திற்கு வழிநடத்தும் படிகளைத் திருப்பி நித்திய ஜீவனைப் பெற்றார்.
- தேவனுடைய கிருபையினாலே, நாம் இரட்சிப்புக்கு ஏதுவான முக்கிய படிகளைப் பின்பற்றினால் தேவன் நம்மை அதே பரிபூரணத்தில் கண்டு நமக்கும் நித்திய ஜீவனைப் பரிசாக அளிப்பார்.
- கிருபை என்றால், நாம் இரட்சிப்பை சம்பாதிக்கமுடியாது, அது இலவசமான ஓர் ஈவு.
- இயேசுகிறிஸ்து பூமிக்குத் திரும்பி வந்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் இராஜாவாக அரசாளும்போது நமக்கு நித்திய ஜீவனாகிய பரிசை அளிப்பார்.
- 1000 ஆண்டுகளுக்குப் பின்பு மரணம் அழிக்கப்பட்டு பாவம் முற்றிலுமாக நீக்கப்படும்.
- கடைசியாக பூமி தேவனுடைய மகிமையால் முற்றிலும் நிறப்பப்படும்.

**பாகம் 2**

## இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் ?

### தேவையான படிகள்

நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் ஐந்து தேவையான படிகளை நாம் கடக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

5. கீழ்ப்படிதலின் வாழ்க்கை வாழ வேண்டும். மத்தேயு 28:19-20, 1. தீமோத்தேயு 4:16, மத்தேயு 10:22, யாக்கோபு 1:12.
4. ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்போஸ்தலர் 2:38, மாற்கு 16:16, அப்போஸ்தலர் 8:15, அப்போஸ்தலர் 10:43, 47-48.
3. மனந்திரும்பி மாற்றப்பட வேண்டும் அப்போஸ்தலர் 3:20, லூக்கா 13:3.
2. தேவன் மீதும் சுவிசேஷத்தின் மேலும் நம்பிக்கை வைக்கவேண்டும்.

   எபேசியர் 2:8, எபிரெயர் 11:6, அப்போஸ்தலர் 8:12.
1. கிருபையைப் பெற்றுக்கொள்ள நம்மைத் தாழ்த்த வேண்டும். ரோமர் 3:23-24, தீத்து 2:11.

### 1. கிருபையைப் பெறத் தாழ்த்துதல்

நம்மைத் தாழ்த்துவதே முதல்படி. ஏனெனில் நித்திய ஜீவனாகிய இந்த அற்புதமான வெகுமதியைப் பெற நம்மைத் தகுதிப்படுத்த நம்மால் எதையும் செய்யமுடியாது, நாம் செய்யவும் இல்லை. நாமெல்லோரும் பாவம் செய்திருக்கிறபடியால் மரணத்துக்குப் பாத்திரவான்களாக உள்ளோம் (ரோமர் 6:23). நித்திய ஜீவன் என்பது நம்மால் சம்பாதிக்க முடியாத ஒரு வெகுமதி, நாம் ஒருபோதும்



அதைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக கருத முடியாது. தேவனுடைய கிருபையால் (இரக்கம்) தான் தகுதிப்படுத்தப்படுகிறோம் (செவ்வையாக்கப்படல்) என கூறப்பட்டுள்ளோம்.

“எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமை யற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்” (ரோமர் 3:23-24).

ஆகையால் நமக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிற கிறிஸ்துவின் வருகைக்கு நம்முடைய மனதை ஆயத்தப்படுத்தும்படி நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும்.

“*.... நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துக் கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.*’’ (1. பேதுரு 5:5-6)

### 2. தேவன் மீதும் சுவிசேஷத்தின் மீதும் நம்பிக்கை வைத்தல்

நமக்கு விசுவாசம் இருந்தால் மட்டுமே தேவன் நம்மை தம்முடைய கிருபையால் இரட்சிப்பார்:

“*கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடை ஈவு*” (எபேசியர் 2:8).

‘‘*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்*’’ (எபிரெயர் 11:6).

தேவன் இருக்கிறார். நமக்கு பலன் அளிப்பார் என்று மட்டும் நாம் விசுவாசியாமல், தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தியிலும் இயேசு கிறிஸ்துவிலும் நாம் விசுவாசம் வைக்கவேண்டும்.... இந்த செய்தியே பவுலின் பிரசங்கத்தின் முக்கிய மையமாகக் காணப்பட்டது.

*"மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்"* (அப்போஸ்தலர் 28:31).

ஒரு நபர் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்றால் அவர் சுவிசேஷத்தில் விசுவாசம் வைக்கவேண்டும்.

*"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்"* (அப்போஸ்தலர் 8:12).

தேவனையும் இயேசுவையும் குறித்து சரியான நம்பிக்கை கொள்வதும் முக்கியமானது. உண்மையாய் தொழுதுக் கொள்ளுகிறவர்கள். தேவனை உண்மையோடுத் தொழுதுக் கொள்வார்கள் என நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

*"உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்."* (யோவான் 4:23).

நம்முடைய நித்திய ஜீவன் மெய்யான ஒரே தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அறிவதைச் சார்ந்தேயுள்ளது எனவும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

*''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"* (யோவான் 17:3).



தேவன், கிறிஸ்து மற்றும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து சரியான ஒரு அறிவு வேதத்தை வாசிப்பதன் மூலம் மட்டுமே வரும். பவுல் நற்செய்தியை பெரேயாவிலுள்ள வர்களுக்கு அறிவித்தபோது, அவர்கள் அவன் சொல்லியதை வெறுமனே ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்கள் தாங்கள் கேட்கிறவைகள் உண்மையானதா என்று வேதத்தில் ஆராய்ந்துப் பார்த்தார்கள் (அப்போஸ்தலர் 17:11). நாமும் இப்படிப்பட்ட மனப்பான்மையுடையவர்களாயிருந்து, உண்மையை ஆராய்ந்து தேட வேண்டும்.

தேவனுடைய கட்டளையின்படி தேவனைப் பணிந்துக் கொள்ளாமல் தேவனுக்கு உகந்தது எனத் தாங்கள் எண்ணுகிறபடி தேவனைத் தொழுதுக் கொள்ளுகிறவர்களைக் குறித்து தேவனுடைய நோக்கம் என்ன என்பதற்கு உதாரணமாக வேதத்தில் அநேக மாதிரிகளைக் காணலாம்.

- காயீன் தன்னுடைய விருப்பப்படி தேவனைத் தொழுதுக் கொண்டு தேவனால் புறக்கணிக்கப் பட்டான். அவனுடைய கிரியைகள் பொல்லாங்குள்ளதாயிருந்தது என புதிய ஏற்பாட்டில் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது ( 1. யோவான் 3:12).

- ஆரோனின் குமாரர்களான நாதாபும் அபியூவும் தேவனை ஆராதிக்க கீழ்ப்படிதலில்லாமல் தேவசமுகத்தை அணுகினபடியால் தேவசமூகத்திலிருந்து அக்கினி வந்து அவர்களை அழித்துப் போட்டது. (லேவியராகமம் 10:1-3).

- கிறிஸ்துவின் நாட்களில் யூதர்கள் தேவன் வீணும் வெறுமையுமாக கருதின் விதமாக தங்கள் ஆராதனையை மாற்றியிருந்தார்கள் (மத்தேயு 15:9). அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைவிட்டு "புறம்பே தள்ளப்படுவார்கள்" (லூக்கா 13:28).

ஆகவே:

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2. தீமோத்தேயு 2:15).

### 3. மனந்திரும்பி மாற வேண்டும்

தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் குறித்த சத்தியத்தை அறிந்தபின், நாம் மனந்திரும்ப வேண்டும். பவுல் கூறுகிறான்:

*"உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப் படுங்கள்''* (அப்போஸ்தலர் 3:20).

மனந்திரும்புதல் என்பது "நன்மைக்கேதுவாக ஒருவருடைய மனதை மாற்றிக் கொள்வது." எனவே நாம் எண்ணும் வகையை மாற்றிக்கொண்டு தேவனிடத்தில் திரும்ப வேண்டும். நம்முடைய முழுவாழ்க்கையும் சரியான திசைக்கு நேராகத் திருப்பப்பட வேண்டும். வாழ்க்கை முழுவதும் தேவனுக்குச் சேவை செய்யும்படி ஒப்புவித்து கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும்.

### 4. ஞானஸ்நானம் பெற வேண்டும்

ஞானஸ்நானம் ஒரு அற்பமான, அதிகமுக்கிய மற்றதாகக் காணப்பட்டாலும், அது மிகுந்த அர்த்தமும் முக்கியத்துவமும் வாய்ந்தது. ஞானஸ்நானத்தின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ள நாம் கண்டிப்பாக நேரம் எடுத்து, அதின் முக்கியத்துவத்தை உணர்ந்துக்கொள்ள வேண்டும். ஞானஸ்நானம் இஷ்டப்பட்டால் எடுக்கலாம் என்று விடக்கூடிய ஒன்றல்ல, அது இன்றியமையாத படியாகும். விசுவாசத்தைத் தொடர்ந்து ஞானஸ்நானம் எடுக்கப்பட வேண்டும் என நமக்கு தெளிவாகச்



சொல்லப்பட்டிருக்கிறது.

*''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்"* (மாற்கு 16:16).

லேவியராகமம் புஸ்தகம் பாவநிவாரணப் பலியைக் குறித்து யூதருக்குக் கற்பித்தது. பாவ நிவாரண பலியைச் செலுத்துகிற மனிதன் மிகச்சிறந்த ஆட்டுக்குட்டியை எடுத்து அதின் இரத்தத்தையே செலுத்துவான். அது அடிக்கப்படுவதற்கு முன், பாவம் செய்த அந்த மனிதன் முன்வந்து தன் கைகளை அந்த மிருகத்தின் தலைமீது வைப்பான் (லேவியராகமம் 4:27-29). இப்படிச் செய்வதன் மூலம் அவன் அந்தப் பலியோடு ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறான். அந்த மிருகம் மிகவேகமாக மரிப்பதைப் பார்த்த அவன், அந்த மிருகம் தனக்குப் பதிலான பிரதிநிதி எனப்புரிந்துக் கொள்வான். பாவம் எவ்வளவு கொடியது, அது தேவனுடைய பார்வையில் எவ்வளவு பயங்கரமானது என்று உணர்ந்து, பாவத்தை மூடத்தேவன் கொடுத்த உடையின் மூலம் தேவனுடைய மிகுந்த அன்பை மெச்சிக்கொள்வான்.

அதேவிதமாக இன்று நமக்குப் பாவமன்னிப்பு உண்டு. ஞானஸ்நானம் மூலம் நாம் நமக்கான நேர்த்தியான பலி ஆடாகிய இயேசு கிறிஸ்துவோடு தொடர்புக் கொள்ளுகிறோம். ஞானஸ்நானம் மூலம் கிறிஸ்துவோடு நமக்குள்ள இந்த தொடர்பைக் குறித்து ரோமர் புஸ்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது: ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும்

ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் - மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (ரோமர் 6:3-8).

ஞானஸ்நானம் நாம் மரிப்பதற்கு அடையாளம், கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழுந்ததைப் போல நாமும் தண்ணீருக்குள் அடக்கம் எண்ணப்பட்டு உயிர்த் தெழுகிறோம்.

ஞானஸ்நானத்திற்குப் பின் நாம் தேவனோடு ஒரு புதிய உடன்படிக்கைக்குள் நுழைகிறோம். நம்முடைய பழைய பாவங்காளல்லாம் கழுவப்பட்டு புதிய சிருஷ்டியாக மாறுகிறோம். (2. கொரிந்தியர் 5:17).

**5. கீழ்ப்படிதலின் வாழ்க்கை வாழவேண்டும்**

நாம் ஞானஸ்நானம் பெற்றபின் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இரட்சிப்பின் அற்ப்புத நம்பிக்கையைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

*"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட*



*இருக்கிறேன் என்றார். ஆமென்"* (மத்தேயு 28:19-20).

தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதத்தில் கீழ்காணும் ஆலோசனையை வாசிக்கிறோம்:

*''உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைக்கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்''* (1. தீமோத்தேயு 4:16).

நாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது நம்முடைய எஜமானை மாற்றுகிறோம். நாம் இன்னும் பாவத்திற்கு அடிமைகளல்ல, நீதிக்கே அடிமை (ரோமர் 6:16-23). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய புதிய எஜமானாய் மாறுகிறார் (ரோமர் 1:1). நாம் ஒரு விலைகிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறபடியால் (1. கொரிந்தியர் 6:19-20), நாம் அவருக்கு 100% நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் கர்த்தரோடு செய்யும் இந்த ஒப்புக்கொடுத்தல் வாழ்நாள் முழுவதற்கும் உரியது. நாம் அதில் கடைசிபரியந்தம் உண்மையாயிருக்கவும் அதில் நிலைத்து நிற்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

*"என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக் கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்"* (மத்தேயு 10:22).

*"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்"* (யாக்கோபு 1:12).

கிறிஸ்துவினுடைய கற்பனைகள் நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் நம்முடைய நன்மைக்கேற்றதாய் இருக்கிறது. அவைகள் நம்மை தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஆயத்தப்படுத்தும்படியாக வடிவமைக்கப்பட்டவைகள்.

**(கிறிஸ்துவின் கற்பனைகள்** என்னும் கைபுஸ்தகத்தைப் பெற இப்புஸ்தகத்தின் பின் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு கேட்டு எழுதி பெற்றுக் கொள்ளவும்).

கிறிஸ்துவின் கற்பனைகளை நாம் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம் (மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்), அத்துடன் அப்போஸ்தலனாகிய பவுல் 1. கொரிந்தியர் 14:37ல் தான் எழுதுவதும் கிறிஸ்துவின் கட்டளைகளே எனவே அவைகளை அசட்டை செய்யலாகாது எனக் கூறுகிறான். நாம் இந்த கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ, நாமாக முயற்சிக்கும் போது நாம் தவறிவிடுவோம். ஆகிலும் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளபடியால் நாம் ஜெபத்தின்மூலம் தேவனிடத்தில் வந்து நம்முடைய பாவத்திற்கான மன்னிப்பைப் பெற்று கொள்ளலாம் (1. யோவான் 1:7-9; 2:1-2).

கீழ்ப்படிதலில் நிலைத்திருக்கும் படியான போராட்டம் இலகுவானதல்ல. இந்தப் போராட்டம் இலகுவானதல்ல என தேவன் அறிவார், நாம் நம்முடைய பொலவீனங்களை மேற்கொள்ளவும், அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவும் தேவன் நமக்கு விலையேறப்பெற்ற ஆதாரங்களை அருளியிருக்கிறார். அவைகள் கீழ்காணுமாறு.

1. **வேதம்வாசித்தல்** - நாம் வாசிப்பதற்காக தேவன் தம்முடைய வார்த்தையை பத்திரப்படுத்திவைத்துள்ளார். ஒவ்வொரு நாளும் நம்முடைய சரீரபெலத்திற்கு உணவு எப்படி தேவைப்படுகிறதோ, அதேவிதமாக நம்முடைய ஆவிக்குரிய பெலத்திற்கு தேவனுடைய வார்த்தையை ஒழுங்காக உட்கொள்ள வேண்டும். நீங்கள் ஒழுங்காக வேதத்தை வாசிக்க உங்களுக்கு உதவும்படியாக கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் அனுதின வேதவாசிப்பு கால அட்டவணை ஒன்றை



ஆயத்தப்படுத்தியுள்ளது, அதன்மூலம் பழைய ஏற்பாட்டை ஆண்டிற்கு ஒருமுறையும் புதிய ஏற்பாட்டை இரண்டு முறையும் வாசிக்கலாம். (இலவச பிரதிக்கு எழுதுங்கள்).

2. **ஜெபித்தல்** - எந்த வேளையானாலும் நாம் ஜெபத்தின்மூலம் தேவனோடு பேசமுடியும். நாம் சோர்ந்து பெலவீனமாகக் காணப்படும்போது நம்மை பெலப்படுத்தும்படியாகவும் நமக்கு உதவி செய்யும் படியாகவும் அவரிடம் கேட்கலாம். பரலோகத்திலிருக்கும் நம்முடைய தகப்பனிடம் தொடர்புகொள்ளுதல் நாம் கைவிடமுடியாத ஒன்று. நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமென்று இயேசு நமக்குச் சொல்லுகிறார் (லூக்கா 18:1). குறைந்தபட்சம் அல்லது அதிகபட்சம் இத்தனை முறை நாம் அனுதினம் ஜெபிக்கவேண்டும் என்றோ, இந்த குறிப்பிட்ட நேரம் ஜெபிக்க வேண்டும் என்றோ அல்ல- எந்த நேரமானாலும் தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்பார். தானியேல் வழக்கமாக அனுதினமும் காலை, மதியம் மற்றும் மாலையில் ஜெபிக்கும் பழக்கமுள்ளவனாய் இருந்தான். அது நாம் பின்பற்றுவதற்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கிறது. (தானியேல் 6:10).
3. **ஐக்கியம்** - கிறிஸ்து கட்டளையிட்டபடி ஒரே விசுவாசத்தில் உள்ளவர்களோடு அப்பம் புசித்து திராட்சரசம் பானம்பண்ணுவதன்மூலம் ஐக்கியத்தை பகிர்ந்துக் கொள்ளுதல் (1. கொரிந்தியர் 11:23-29), ஒரு பெரிய பெலத்தின் ஆதாரமும் உதவியுமாக விளங்கும். அப்பம் மற்றும் திராட்சரசத்தில் கர்த்தருடைய வாழ்க்கையும் மரணத்தையும் நினைவு

கூருகிறோம். அவருடைய நேர்த்தியான மாதிரியினால் உற்சாகம் அடைகிறோம். மற்ற விசுவாசிகள் நமக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிப்பது போல நாமும் அவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கலாம்.

## 6. ஒருமுறை இரட்சிப்பு, நிரந்தர இரட்சிப்பா ?

இரட்சிப்புக்கு வேதாகமம் உத்தரவாதம் தருவதேயில்லை. தகுதியானவர்களிடத்திற்கு இயேசு கிறிஸ்து திரும்பிவந்து நியாயந்தீர்க்கும் போதே அழியாமையின் வாழ்வு அளிக்கப்படும். வெறுமனே ஆலயத்தில் பங்குபெறுவதும் "இயேசுவை எங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறோம்" (பிரபலமான ஒரு சொற்றொடர், ஆனால் வேதத்தில் காணப்படாத ஒன்று) என்பதும் நம்முடைய இரட்சிப்புக்கு ஆதாரமாவதில்லை.

நாம் ஞானஸ்நானம் எடுத்தப்பின்னும் நம்முடைய இரட்சிப்புக்கு உத்தரவாதம் இல்லையென வேதம் நமக்கு கற்பிக்கிறது. தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க நாம் பிரயாசப்பட வேண்டும் என நமக்கு சொல்லப்படுகிறது. (லுக்கா 13:23-24) மற்றும் நித்திய ஜீவனைத் தேடுகிற அனைவரும் அதைப் பெற்றுக் கொள்வதில்லை (மத்தேயு 7:13). தங்கள் சொந்த இரட்சிப்பில் நம்பிக்கையுள்ள சிலரைக்கூட கிறிஸ்து புரட்கணிப்பார். ஏனெனில் அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யவில்லை (மத்தேயு 7:21-23). நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவது நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் கடமை என கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார் (மத்தேயு 28:19-20), மற்றும் அதற்குக் கீழ்ப்படிய வாஞ்சிப்பது நம்முடைய இரட்சிப்புக்குத் தேவையானது (1. தீமோத்தேயு 4:16, எபிரெயர் 5:9).

தாங்கள் "இரட்சிக்கப்பட்ட" நாளையும், நேரத்தையும் அறிந்திருப்பதாக அநேக கிறிஸ்தவர்கள் உண்மையாக நம்புகிறார்கள். ஆகிலும் நேரத்திற்கு நேரம் அவர்ளுடைய



அதிக நம்பிக்கையால் மிகசுலபமாக தவறு செய்துவிடுகிறார்கள். *"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்"* (1. கொரிந்தியர் 10:12). வேதம் இதைக்குறித்து தெளிவாகப் போதிப்பதாவது: நித்திய ஜீவன் நிகழ்கால விசுவாசிகளின் உடைமை அல்ல (மத்தேயு 10:22, 1. கொரிந்தியர் 15:1-2, தீத்து 1:2, எபிரெயர் 3:12-14, 2. பேதுரு 1:10 பார்கவும், தீத்து 3:7ஐ ரோமர் 8:24 மத்தேயு 24:46ஐ தானியேல் 12:2 ஒத்துப் பார்க்கவும்).

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தங்கள் வாழ்க்கையினூடே வந்த சோதனைகளை 'மேற்கொண்டவர்களுக்கே' இரட்சிப்பு கொடுக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 2:7; 17,26, 3:5, 12, 21 பார்க்கவும்.)

இரட்சிப்பு முற்றிலும் ஒரு எதிர்கால அனுபவம் (ரோமர் 13:11, 1. தெசலோனிக்கேயர் 5:8, எபிரெயர் 1:14).

நித்திய ஜீவன் "கடைசிநாட்களில்" அருளப்படவுள்ளது (யோவான் 6:39-40, 54; 1. கொரிந்தியர் 15:22-23).

மகா அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய இரட்சிப்பில் நம்பிக்கையிருந்த போதிலும், அழியாமையின் வாழ்வாகிய கிரீடத்தைப் பெறும்படியான ஓட்டத்திலிருந்து தான் விலக்கப்படலாம் என்பதை உணர்ந்தார் (1. கொரிந்தியர் 9:24-27). பவுலுடைய மற்றொரு கடிதத்திலிருந்து அவனுடைய இரட்சிப்புக்கு உத்தரவாதம் இல்லை என்பதை அவன் அறிந்திருந்தான் என்பது தெளிவாகிறது (பிலிப்பியர் 3:10-14). ரோமாபுரியிலுள்ள புறஜாதி விசுவாசிகளுக்கு பவுல் சொல்லுகிறார். தேவனுடைய தயவிலே நிலைத்திருங்கள், அல்லாவிடில் அநேக யூதர்களைப் போல வெட்டுண்டுப் போவீர்கள்:

*''சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க*

*உன்னையும் தப்ப விடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்;* ***அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால்*** *உனக்குத் தயவுகிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்"* (ரோமர் 11:21-22).

நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசியாகும் போது உங்கள் இரட்சிப்புக்கு **உத்தரவாதம் இல்லை** என சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுப்படுத்துகிற மூன்று வேத வசனங்கள் எபிரெயரின் புஸ்தகத்தில் உண்டு.

கீழ்காணும் வசனங்களை வாசித்து இந்த விசுவாசிகளின் இரட்சிப்புக்கு உத்தரவாதம் இருந்ததா என உங்களையே கேட்டுப்பாருங்கள்:

(i) எபிரெயர் 3:12-14

(ii) எபிரெயர் 6:4-6

(iii) எபிரெயர் 10:26-29

நாம் நமக்குள் இயற்கையாகவே காணப்படும் சுயநலத்தை எதிர்த்து போராடி தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவே இருக்கவேண்டும் என தேவன் விரும்புகிறார். சோதனைகளை மேற்கொள்ளுவது இலகுவான காரியமல்ல, அதிக முயற்சி மற்றும் விடாமுயற்சியுடன் கூடிய ஊக்கமான ஜெபமும் இடைவிடாத வேதவாசிப்பும் தேவைப்படும். பவுல் இந்த போராட்டத்தைத் தனக்குள்ளான 'யுத்தம்' என விளக்குகிறான். நன்மையைச் செய்வதா தீமையைச் செய்வதா என்பதற்கிடையே போராட்டம் காணப்பட்டது. அநேகமுறை நன்மை செய்யவேண்டும் என விரும்பியும் அவன் தீமையையே செய்வதைக் கண்டான் (ரோமர் 7:14-25).



நியாயத்தீர்ப்பின் போது ஒவ்வொருவருக்கும் தங்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக பரிசளிக்கப்படும், தன்னுடைய நற்கிரியையிலே தொடர்ந்து காணப்படுகிறவர்களுக்கே நித்திய ஜீவன் அருளப்படும். அதற்குமாறாக, கீழ்ப்படியாதவர்களுக்கு உக்கிரகோபாக்கினையும் வியாகுலமுமே கிடைக்கும் (ரோமர் 2:5-10).

'இரட்சிப்பு' என்ற வார்த்தையின் உபயோகத்தின் மூலம் இரட்சிப்பைக் குறித்து பலகுழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. 'இரட்சிப்பு' என்னும் பதம் எவ்வாறு ஒன்றுக்கும் அதிகமான விதத்தில் பயன் படுத்தலாம் என்று கீழ்காணும் உதாரணங்கள் காண்பிக்கிறது.

ஒரு விமானம் நொறுங்கி ஒரு பெரிய சமுத்திரத்தின் நடுவில் விழுந்ததாக கற்பனைச் செய்யுங்கள் விமானத்திலுள்ளவர்கள் தப்புவதற்காக போராடுகிறார்கள். அதிலுள்ள ஒருவர் ஒரு மீட்பு படகைப் பார்த்து "நன்றி ஆண்டவரே, நான் இரட்சிக்கப்பட்டேன்" எனக் கத்துகிறார். ஆகிலும் அவர் ஆபத்திலிருந்து முற்றிலும் வெளிவரவில்லை, முதலாவது, அவர் படகை சென்றடைய வேண்டும். படகில் இருந்தாலும் அவர் இன்னும் முற்றிலுமாக இரட்சிக்கப் படவில்லை. அந்த படகு மூழ்கலாம் அல்லது மீட்பு விமானம் வரும்வரை உணவும் குடிநீரும் இல்லாமல் போகலாம். மீட்பு விமானத்திலிருக்கும் போதும், அந்த விமானம் நொறுங்கும் வாய்ப்புண்டு அவன் நிலத்தில் கரையேறும்வரை அவன் முற்றிலுமாய் 'இரட்சிப்பு' அடையவில்லை.

வேதாகமத்திலும் நாம் 'இரட்சிப்பு' என்னும் பதம் பலவிதமான எடுத்துக்காட்டுகளில் பயன் படுத்தப்படுவதைக் காணலாம். மூன்று தெளிவான விதமாக 'இரட்சிப்பு' என்னும் பதம் வேதத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதை அறிந்துக்கொள்வதில் தவறான முடிவுக்கு வந்துவிடாமல்

இருக்க கவனம் தேவை.

1. "இரட்சிப்பு" என்னும் பதம் கடந்தக் காலத்தில் சொல்லப்படும்போது கிறிஸ்துவினுடைய தியாக பலியையும் ஒரு ஆண் அல்லது பெண் ஞானஸ்நானத்தின் மூலம் அந்த தியாகபலியோடு தன்னை இணைப்பதையும் குறிக்கிறது (2. தீமோத்தேயு 1:9 மற்றும் தீத்து 3:5யை உதாரணமாக கொள்ளலாம்). இது சமுத்திரத்தின் நடுவில் தவிக்கும் மனிதன் மீட்பு படகைப் பார்த்ததும் "நன்றி ஆண்டவரே, நான் இரட்சிக்கப்பட்டேன்" என்பதைப் போன்றது.
2. ''இரட்சிப்பு'' நிகழ்காலத்தில் (தொடர்வினைச் சொல்லில் கிரேக்கமொழியில் ''இரட்சிக்கப்பட்டு கொண்டிருக்கிறேன்'' என மிக குறிப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.) கீழ்காணும் வேதவாக்கியங்கள் ஒரு விசுவாசியின் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து நடைப்பெறும் காரியம் எனக்குறிப்பிடுகிறது (அப்போஸ்தலர் 2:47, 1. கொரிந்தியர் 1:18, 1. கொரிந்தியர் 15:2 மற்றும் 2. கொரிந்தியர் 2:15ஐ பார்க்கவும்) இது மீட்புப் படகில் ஏறியிருக்கிற ஒரு மனிதனைப் போன்றது.
3. "இரட்சிப்பு" எதிர்காலத்தில் அல்லது முடிவாக (மத்தேயு 10:22, 1. கொரிந்தியர் 3:15,5:5 மற்றும் 1. தீமோத்தேயு 4:16 பார்க்கவும்) நிறைவேறும். இது பத்திரமாக நிலத்தில் கரையேறின மனிதனைப்போன்றது.

**முடிவுரை:**

கிறிஸ்துவினுடைய பரிபூரண கீழ்ப்படிதலினால் தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றி இந்த பூமியை தம்முடைய மகிமையால் நிரப்பமுடியும். கிறிஸ்து திரும்பி வரும்போது, அவர் தேவனுடைய இராஜ்ஜியத்தை மறுப்படி நிலை நாட்டுவார்.



அந்த இராஜ்ஜியம் வளர்ந்து முழு உலகையும் நிரப்பும்.

நாம் தேவனால் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள படிகளைப் பின்பற்றினால் நாமும் அந்த இராஜ்ஜியத்தில் பங்கடையலாம். இந்த படிகளை நாம் பின்பற்றினால், தேவன் நம்மை நீதிமான்களாக கருதுவார். நாம் நம்முடைய நித்தியத்தைப் பிரேதக்குழியில் கழிக்காமல் நித்திய ஜீவனைப் பெற்று வாழுவோம்.

தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நம்பிக்கை உண்மையானது. தேவனுடைய திட்டம் தொடர்ந்து விளங்கும். ஆகவே நாம் இரட்சிக்கப்பட்டு அவருடைய அனாதி தீர்மானத்தில் பங்கடைய வாய்ப்புண்டு. நாம் செல்வதற்கு இரண்டே வழிகள் உள்ளது. நாம் விரிவான பாதையைத் தெரிந்தெடுத்து மரணத்துக்கு நேராய் செல்லலாம், அல்லது இடுக்கமான வாசல் வழியாய் ஜீவனுக்குச் செல்லலாம் - இதற்கான தீர்மானம் எடுப்பது நம்கையில் உள்ளது.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசேயால் சொல்லப்பட்ட வார்த்தைகளைப் பார்ப்போம்:

"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவரைப் பற்றிக்கொள்வாயாக, அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்'' (உபாகமம் 30:19-20) ஜேம்ஸ் மற்றும் டெப்ஃப்லின்ற்.

### கேள்விகள்

1. ஏன் மனிதனுக்கு இரட்சிப்பு தேவை ?
2. தேவன் எவ்வாறு ஏதேனில் ஒரு உடையைக் கொடுத்தார் ?
3. தேவன் நமக்கு எத்தகைய உடையைக் கொடுத்திருக்கிறார் ?
4. எப்போது தேவன் ஆண்களையும் பெண்களையும் இரட்சிப்பார் ?
5. 'கிருபை' என்றால் என்ன ?
6. இரட்சிப்புக்குத் தேவையான முக்கியமான ஐந்து படிகள் எவை ?
7. ஒவ்வொரு படிக்கும் ஆதாரமான இரண்டு வேத வாக்கியங்களைக் கொடுக்கவும்.
8. ஒருமுறை இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் விழுந்து விட வாய்ப்புண்டா ?
9. கேள்வி 8ட்டில் நீங்கள் அளித்த பதிலுக்கு ஆதாரமான வேதவாக்கியங்களைக் கொடுக்கவும்.
10. மோசே இஸ்ரவேலருக்கு தெரிந்துக் கொள்ளும்படியாக எதை முன்வைத்தான் ?

❖ ❖ ❖



The Communications and Literature requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu

கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம்

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

**கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 4237
பெங்களூர் 560042
இந்தியா

**<u>Elsewhere :</u>**

<u>இதர மாநிலங்கள்:</u>

**The Christadelphians,**
G.P.O. Box 159,
Hyderabad, A.P. 500001
India

**கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 159
ஐதராபாத், ஆந்திரா 500001
இந்தியா

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA

**கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 60
நெகொம்போ - 11500
ஸ்ரீலங்கா

**The Christadelphians,**
P.O. Box 9052,
Banani, DAKA - 1213
BANGLADESH

**கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 9052
பனானி, டாக்கா - 1213
பங்களாதேஷ்

‘‘நசரேயனாகிய இயேசு கிறிஸ்து... அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை’’ (அப்போஸ்தலர் 4:12)

இரட்சிப்பு என்றால் என்ன ?

அதை மனிதன் எவ்வாறு பெறமுடியும் ?

இந்தச் சிறுநூல் மனிதன் மற்றும் தேவன் யார் என்றும், தேவன் எவ்வாறு ஒரு வழியை உண்டாக்கினார். அந்த ஒரே வழி மூலமாக மட்டும் மனிதன் எவ்வாறு மரணத்திலிருந்து முடிவில் இரட்சிக்கப்பட முடியும் என்றும் வேதகமத்தின் ஆதாரத்துடன் காண்பிக்கிறது.